# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

## M.C.O.P.20/2023

## CNR.No.TNCB19000

| Deposition | : | PW.1 |
|---|---|---|
| Name | : | நாகராஜ் |
| Father’s / Husband Name | : | மாதையன் |
| Village / முகவரி | : | தீரம்பாளையம் |
| Age / வயது | : | 60 |

The witness swearned under Oaths Act 1969 on this the day of 29th January 2026

**முதல் விசாரணை**

நான் தீரம்பாளையத்தில் வசிக்கிறேன். நான் வழக்கின் மனுதாரர் ஆவேன். முதல் விசாரணைக்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். படித்துபார்த்து கையொப்பம் செய்தேன். கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்.**

| வ. எண். | தேதி | ஆவண விபரம் | ஆவணத்தின் தன்மை | ஆவண வரிசை |
|---|---|---|---|---|
| 1 | | முதல் தகவல் அறிக்கை | சான்றிட்ட நகல் | ம.சா.ஆ.1 |
| 2 | | குற்றப்பத்திரிக்கை | சான்றிட்ட நகல் | ம.சா.ஆ.2 |
| 3 | | மாதிரி வரைபடம் | சான்றிட்ட நகல் | ம.சா.ஆ.3 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | | மோட்டார் வாகன ஆய்வறிக்கை Bolero Pickup bearing Regn. No. TN 38 CM 9754 | சான்றிட்ட நகல் | ம.சா.ஆ.4 |
| 5 | | கே. பி. எஸ் மருத்துவமனையில் கொடுத்த மருத்துவ ரசீது ரூ.2,240/- | அசல் | ம.சா.ஆ.5 |
| 6 | | அரசு மருத்துவமனையில் கொடுத்த காயச்சான்றிதழ் | சான்றிட்ட நகல் | ம.சா.ஆ.6 |
| 7 | | அரசு மருத்துவமனை கொடுத்த டிஸ்சார்ஜ் சம்மரி | அசல் | ம.சா.ஆ.7 |
| 8 | | அரசு மருத்துவமனை கொடுத்த M.R.I Scan Report | அசல் | ம.சா.ஆ.8 |
| 9 | | சிவானி மருத்துவமனையில் கொடுத்த டிஸ்சார்ஜ் சம்மரி | அசல் | ம.சா.ஆ.9 |
| 10 | | சிவானி மருத்துவமனையில் கொடுத்த மருத்துவ பில்கள் ரூ.26,000/- | அசல் | ம.சா.ஆ.10 |
| 11 | | ஆதார் அடையாள அட்டை | நகல் | ம.சா.ஆ.11 |
| 12 | | குற்றவியல் நடுவர் நீதிமன்ற தீர்ப்பு | சான்றிட்ட நகல் | ம.சா.ஆ.12 |

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**3-ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து நடந்து 5 நாட்கள் கழித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். விபத்து என்னுடைய அஜாக்கிரதையால் நடந்ததால்தான் 5 நாட்கள் கழித்து காலதாமதாக புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வரைபடத்தில் என்னுயைட கவனக்குறைவால்தான் விபத்து நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் மீது மோதிய வாகனத்திற்கு சிறு சேதாரம் கூட இல்லையென மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சிவானி மருத்துவமனை மருத்துவ ஆவணம் ம.சா. ஆ. 9 எனக்கு சம்பந்தப்பட்டதல்ல என்றால் சரியல்ல. அதில் எனது தகப்பனார் பெயர் வேறு பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் மேலும் விலாசம், ஆகியவை வேறு நபர்களுக்குண்டானது என்பதால் நான் அதிகமான இழப்பீடு பெற வேண்டி எனக்கு சம்பந்தம் இல்லாத ஆவணத்தை தாக்கல்

செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது வயது, வருமானம் மற்றும் தொழில் குறித்து நிரூபணம் செய்ய எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு விபத்தினால் எந்தவிதமான ஊனமும் ஏற்படவில்லை என்றும் விபத்து எனது அஜாக்கிரதையால் நடந்ததால் 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவரல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

K PALANIVEL

Digitally signed by K PALANIVEL
Date: 2026.01.29 20:11:57 +0530

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.